# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
## C.C. No. 8/2024 PW.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ரவிசந்திரன் | த–பெ /க.பெ. | குருசாமி |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 47/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆட்டோ ஓட்டுநர் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2026**

-------------------------------------------------------------------------------------------------------

**12.02.2026**

**குறுக்கு விசாரணை :**

**1) வழக்கின் புகார்தாரர் முனியசாமி எனது உறவினர் என்றால் சரிதான். எப்படி சொந்தம் என்றால் என் அக்கா கணவர் ஆவார். என் அக்காவின் பெயர் முனீஸ்வரி. வழக்கின் எதிரி அமல புஷ்பத்தை நான் நீதிமன்றத்தில் வைத்துதான் நான் முதன் முறை பார்க்கிறேன் என்றால் சரிதான். புகார்தாரர் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 ஆவணமான கடனுறுதிசீட்டில் எதிரி எத்தனை கையொப்பம் செய்தார் என்றால் ஒரு கையொப்பம் செய்தார். எந்த தேதியில் எத்தனை மணிக்கு புகார்தாரர் வீட்டிற்கு சென்றேன் என்றால் 15.04.2024 ல் மாலை 5 மணிக்கு சென்றேன். எப்போது எதிரி வந்தார் என்றால் நான் இருக்கும்போது வந்தார். எத்தனை மணியிருக்கும் என்றால் சுமார் 05.00 மணி இருக்கும். யார் யாரிடம் பணம் வாங்கினார் என்றால் முனியசாமியிடம் அமல புஷ்பம் பணம் வாங்கினார். எவ்வளவு தொகை வாங்கினார் என்றால் ரூ. 1 லட்சம் வாங்கினார். கடனுறுதிசீட்டில் எழுதியுள்ளதை வைத்து நான் ரூ.1 லட்சம் என்று**

**சொல்கிறேன் என்றால் சரிதான்.**

**2) கடனுறுதிசீட்டை யார் எழுதினார்கள் என்றால் சேவுகன் என்பவர் எழுதினார். அதில் உள்ள விபரங்களை என் அக்கா வீட்டுக்காரர் சொல்லிதான் எழுதினார்களா என்றால் எதிரி சொல்லிதான் எழுதினார்கள். என் அக்கா கணவர் எங்கு வேலை செய்கிறார் என்றால் காரைக்குடி அரசு பேரூந்து டெப்போவில்லை வேலை செய்கிறார். பணம் கொடுத்ததாக சொல்லுவது என்ன கிழமை என்றால் சனிக்கிழமை. புகார்தாரர் எனது உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எதிரி எந்த கடனும் புகார்தாரரிடம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும் புகார்தாரரும் கூட்டு சேர்ந்து இந்த வழக்கிற்காக கடனுறுதிசீட்டை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அன்றைய தினம் என் அக்காவை சந்தித்து பேசினேனா என்றால் பேசினேன்.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.12 16:17:05 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)